# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2151/58 - 2019 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2019.11.29

*2151/58 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 70.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

*10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை*

*2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 10 (1) (அ) இனால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தொழிற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, உணவு பொதியிடப் பயன்படுத்தப்படும் பொலித்தீன் தாள்களின் (Lunch sheets) அனைத்து உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கும் உணவு பொதியிடப் பயன்படுத்தப்படும் பொலித்தீன் தாள்களின் ஒவ்வொரு பைக்கற் அல்லது கட்டின் மீதும் அனைத்து மூன்று மொழிகளிலும் தெளிவாகவும் அழிக்க முடியாத வகையிலும் பின்வரும் தகவல்களினைக் கொண்ட லேபலினை இடுதல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.*

(i) *பண்டப் பெயர் ;*
(ii) *ஆகக்கூடிய சில்லறை விலை ;*
(iii) *உற்பத்தியாளரின் பெயரும் முகவரியும் ;*
(iv) *தயாரிப்பு மற்றும் காலாவதியாகும் திகதி ;*
(v) *பயன்படுத்திய பொருட்கள்* (PLA, *கஞ்சிப் பசை,* PABT *போன்றவை) ;*
(vi) *பொருட்கள் பற்றிய வெளிப்படுத்துகை (உணவுத் தரம் மற்றும் இயற் சிதைவுத் திறன் கொண்ட) ;*
(vii) *மத்திய சுற்றாடல் அதிகார சபைப் பதிவு இலக்கம் ;*
(viii) *தாளின் அளவு (அங்குலங்களில்) ;*
(ix) *பைக்கற்/கட்டிலுள்ள தாள்களின் எண்ணிக்கை.*

*இப்பணிப்புரையானது 2020, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.*

*பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது இந்தப் பணிப்புரையின் மூலம் 2009, பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதிய 1588/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 29 ஆம் இலக்கப் பணிப்புரையினை இரத்துச் செய்கின்றது.*

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

கலாநிதி லலித் என். செனவீர,
தவிசாளர்.

கொழும்பு,
*2019, நவெம்பர் 27.*

*12-519*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.